**O.S. 32/2022** **நாள்: 01-07-2026**

**DW1 பக்கிரிசாமி த/பெ முருகையன்**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

**1.** தாவா சொத்து 2ம் பிரதிவாதி திருக்கோவிலுக்கு சொந்தமானது என்றால் சரிதான். தாவா சொத்தின் அளவு 1200 சதுர அடி என்றால் சரிதான். அவ்வாறு தான் வாதி சொல்லியுள்ளார். 440 சதுர அடி அளவு வாதிக்கு பாத்தியப்பட்டது. மீதமுள்ளது எனக்கு பாத்தியப்பட்டதாகும். 440 சதுர அடி அளவில் என்னவெல்லாம் உள்ளது என்றால் கீழே கடையும் மேலே வீடும் உள்ளது. 760 அடியில் என்னவெல்லாம் உள்ளது என்றால் ஓட்டலுக்குண்டான கிச்சன், அடுப்பு ஆகியவை உள்ளது. ஓட்டல் எனது பட்டா நிலத்தில் உள்ளது. ஓட்டல் உள்ள நிலத்திற்கு 2ம் பிரதிவாதி கோவிலுக்கு பகுதி வரி செலுத்தியுள்ளேனா என்றால் பட்டா நிலம் என்பதால் செலுத்தவில்லை. ஆனால் 760 ச.அடியில் உள்ள கிச்சன் மற்றும் அடுப்பு நிலத்திற்கு பகுதி வரி செலுத்தியுள்ளேன். ஒரு முறை மட்டும் செலுத்தியுள்ளேன்.

2. தாவா சொத்தான திருக்கோவிலுக்கு சொந்தமான நிலத்திற்கு டிரஸ்டி யார் என்றால் செல்வகணபதி ஆவார். திருக்கோவிலின் டிரஸ்டியிடம் பகுதி வரி செலுத்த நான் எழுத்து மூலமாக எழுதி கேட்டேனா என்றால் ஒருமுறை பகுதி வரி செலுத்தியுள்ளதால் திரும்ப செலுத்த வாய் மொழியாக கேட்டேன். 760 ச.அடியில் பகுதி வரி செலுத்த நான் கேட்டது தாவா சொத்திற்கு கிடையாது என்றால் சரியல்ல, தாவா சொத்திற்கு தான் கேட்டேன். 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் வாதி தான் தாவா சொத்தின் பகுதிதாரர் என்று சொல்லியிருப்பது எனக்கு தெரியுமா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதியின் எதிர் வழக்குரையை காண்பித்து கேட்டபோது வாதி பகுதிதாரர் என்பது உண்மை என்று கண்டுள்ளது. வாதி மட்டுமே பகுதிதாரர் என்று குறிப்பிடப்படவில்லை.

3. எனது ஓட்டல் அருகில் தான் வாதியின் கடை அமைந்துள்ளது என்றால் சரிதான். வாதி அடிக்கடி வெளியூர் சென்று வருவார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு வாதி வெளியூர் சென்று வருவது தெரியும் என்றாலும் அவர் வெளியூர் சென்ற காலத்தில் தான் எனது ஓட்டலின் கிச்சன் மற்றும் அடுப்பை கட்டி விட்டேன் என்றாலும் சரியல்ல. வாதி கோவில் நிர்வாகத்திடம் தனது நிலத்தை நான் ஆக்கிரமித்து விட்டதாக புகார்அளித்தார் என்றால் சரியல்ல. எனது ஓட்டலிலிருந்து

புகை வருவதாக புகார் அளித்தார். நான் சொல்வது பொய் என்றாலும் 2ம் பிரதிவாதி எதிர் வழக்குரையில் வாதி புகார் அளித்ததாகவும் ஆக்கிரமிப்புகளை அகற்றி கொள்ள அறங்காவலர் அறிவுரை வழங்கியதாகவும் கண்டுள்ளது என்றால் சரியல்ல. அடுப்பினை மாற்றி வைக்குமாறு அறிவுறுத்தினார்கள் நானும் 2 மாதங்களில் அடுப்பினை மாற்றி அமைத்து கொண்டேன். இது சம்பந்தமாக வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார். சுவர் அதிக சூடு வருவதாக சொன்னதால் அடுப்பினை மாற்றி வைக்குமாறு அறிவுறுத்தினார்கள். நானும் 2 மாதங்களில் அடுப்பினை மாற்றி அமைத்து கொண்டேன். நான் சொல்வது பொய் என்றாலும் தாவா சொத்தினை நான் காலி செய்ய கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல .

4. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் வேறு சொத்துக்குண்டானது என்றாலும் தாவா சொத்துக்குண்டானது என்றாலும் சரியல்ல. எனது சொத்திற்கு அருகில் உள்ள சொத்து அனைத்தும் கோவிலுக்குப் பாத்தியப்பட்டது. எனக்கும் கோவில் அறங்காவலருக்கும் முன்பகை ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எனது எதிர் வழக்குரையில் தாவா சொத்து எனது தந்தையார் காலத்திலிருந்தே எங்களது அனுபவத்தில் இருந்து வந்ததாக சொல்லியுள்ளது வழக்கிற்காக என்றாலும் பொய் என்றாலும் சரியல்ல. நான் எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளபடி வாதியும், 2ம் பிரதிவாதியும் ஒன்று சேர்ந்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்பதும் பொய் என்றாலும் வாதியின் தூண்டுதலின் பேரில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்பதும் பொய் என்றாலும் சரியல்ல. 760 சதுர அடியில் கிச்சன், அடுப்பு வைத்து எனது அனுபவத்தில் உள்ளது என்றால்சரிதான். வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/–ர.மீனாட்சி.எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,–
கீழ்வேளூர்.